







# ஆசார்யர்களின் க்ரந்த முத்துக்கள்

தொகுத்தளிப்பவர் : கீ ப ரா வி

மலர் 1 இதழ் 5 29.01.2025



ஸ்ரீமதே ஸ்ரீ வராஹமஹாதேசிகாய நம:

# உள்ளே....

# படிக்க வேண்டிய உபதேசங்கள்

1. பகவத் குணானுபவம்
2. ஸ்ரீபாஷ்யகாரர் -கொங்கு பிராட்டி விருத்தாந்தம்
3. நம்பிள்ளையின் முத்துக்கள்
4. திருவரங்க பெருமாளரையர்
5. திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் அருளிய அருள்மொழிகள்



ஸ்ரீமதே ராமானுஜாய நம:

# 1.பகவத் குணானுபவம்

[ஸ்ரீ உ.வே.வீராபுரம் சம்பத் தீக்ஷிதர் ஸ்வாமியின் வ்யாசத்திலிருந்து]



எம்பெருமானது திருக்குணங்களை அனுபவித்தல் என்பது ஸ்ரீராமானுஜருக்கு மிகமிக விருப்பமான ஒன்று. அவரது எழுத்துகளில் அலுக்காமல், சளைக்காமல், அடிக்கடி பகவத் குணங்களை அடுக்கிக் கொண்டே இருப்பர். படிக்கும் நமக்கும் பகவத் குணஅனுபவம் தொற்றுக் கொள்ளும்.

- எம்பெருமானது குணங்கள் உண்மையானவை;
- நமக்கு நலம் அளிக்கும் கல்யாண குணங்கள் ஆனவை;
- எண்ணற்றவை;
- ஒவ்வொன்றும் அளவின்றி உயர்ந்து ஓங்கி இருப்பவை;
- எடுத்துக்காட்டாக கருணை எனும் குணத்தை எடுத்துக் கொண்டால், எந்த அளவு கருணை என்பதை நம்மால் அறிய முடியாதபடி, அளவற்ற கருணை உண்டு.
  இப்படி உயர்வர உயர்ந்த எண்ணற்ற கல்யாண குணக்கடலாக பெருமான் இருக்கிறான்.

ஸ்ரீபகவத்ராமானுஜரின் பகவத்குண அனுபவத்துக்கு எடுத்துக் காட்டாக, அவர் அனுபவித்த குணங்களில் சில:-

1) ஜ்ஞாநம், சக்தி, பலம், ஐஸ்வர்யம், வீர்யம், தேஜஸ் என்கிற ஆறும் முக்கிய குணங்கள்.
2. கருணை, பொறுமை முதலியவை நம்மை காப்பதற்குக் கைகொடுக்கும் குணங்கள்.
3. அழகு, ஆனந்தம் முதலியவை நாம் அனுபவிக்க ஏற்றவை.

********************

# 2. ஸ்ரீபாஷ்யகாரர் -கொங்கு பிராட்டி விருத்தாந்தம்

ஸ்ரீபாஷ்யகாரரின் அந்திம காலத்தில் அவரது சிஷ்யர்கள் தம் ஆசாரியரின் பிரிவை எண்ணி வருத்தமும், பின் ஸித்தாந்தத்தை ஸ்தாபிக்க வல்ல ஆசாரியன் இல்லாமல் போய் விடுமோ எனவும் கலங்கினர்.

இதற்கு விடையாக எம்பெருமானார் தனது சிஷ்யையான கொங்கு பிராட்டியின் இல்லத்தில் சென்றால் விடை கிடைக்கும் என்று அருளினார்.

அவர்கள் வந்த காரணம் கேட்ட அப்பெண்மணி உள் சென்று செந்நிறபட்டு நூலான கயிற்றையும், வெண்பட்டு நூலான ஓர் கயிற்றையும் எடுத்து வந்து இவர்கள் எதிரே அமர்ந்து முதலில் பின் புறத்திலிருந்த தன் நீண்ட குழற்கற்றையை எடுத்து முன்புறம் போட்டு கொண்டு அதனை அவிழ்த்து வாசனை தைலங்களைத் தடவி, சிக்கெடுத்தும் சீர்திருத்தி, கற்றையாக வாரி முடிச்சுப் போட்டாள். பின் சிவப்பு பட்டு கயிற்றால் முடிச்சை கட்டி இறுக முடிச்சுப் போட்டாள். பின் சுகமாய் அமர்ந்து மீண்டும் வெண் பட்டு கயிற்றால் முன்னிலும் வலிமையாக யாராலும் அவிழக்க முடியா வண்ணம் முடிந்தாள். பின் வணங்கி அவர்களுக்கு வழிகொடுத்தனுப்பினாள்.

ஸ்ரீபாஷ்யகாரரிடம் சென்று வணங்கி இந்த விருத்தாந்தங்களை கூறக் கேட்ட அவர் "கொங்குபிராட்டி வேத தேவதையின் மறுவடிவு."

"வேதத்தின் மெய் பொருளை நிர்ணயம் செய்ததற்காய் நம்மிடம் நன்றியுடன் சிஷ்யையாய் நடித்தாள். வேதத்தின் பல சாகைகள் இவளுக்கு உருப்பானது. குழல்கற்றை வேதாந்த பாகம், அதை அவிழ்த்து குலைய விட்டது - பிற மதத்தினர் தவறான அர்த்தம் கூறி வேதாந்தத்தை சீர்குலைத்ததைக் காட்டும். வாஸனைத் தைலம் தடவி உருவிக் கொடுத்தது - உண்மையான அர்த்தங்களை காண்பதற்காக வேதாந்த வாக்யங்களில் முதலில் நாம் செய்த ஆராய்ச்சியை காட்டும். கேசங்களைச் சிக்கெடுத்து சீர்படுத்தியது - வாதங்களில் வென்று வேதாந்த வாக்யங்களின் ஒற்றுமையை விளக்கியதாகும். குழல்கற்றையை முடிந்தது வேதமாதா சீர்குலைதல் நீங்கிமன அமைதி பெற்றதைக் குறிக்கும். குழல்கற்றையை சிவப்பு பட்டு நூலால் கட்டியது - நாம் முதலில் ஸ்தாபித்த ஸித்தாந்தத்திற்கு பிற்காலத்தில் கேடு வராதிருப்பதற்காக காஷாயமணிந்த ஸந்யாஸியாகி ஸ்ரீபாஷ்யம் முதலிய கிரந்தங்களால் பிறர்வாதங்களை கண்டித்து ஸித்தாந்தத்தைப் பின்னும் ஸ்தாபித்ததைக் காட்டும். ஸுகமாய் அமர்ந்த நிலை வேதம் இடரின்றி தன் நாயகனான ஸ்ரீமந்நாராயணனை அடைந்து, அணைந்து இன்பமெய்திய நிலையைக் காட்டும்."

"இதையே இராமானுஜ நூற்றந்தாதியில் திருவரங்கத்தமுதனாரும் நாரணனைக் காட்டிய வேதம் களிப்புற்றது என்பார்."

"இவள் வெண்பட்டு கயிற்றால் வலிய முடிந்தது - நாமே சில காலம் கழிந்து காஞ்சியில் தூப்புலில் அவதரித்து, க்ருஹஸ்தாத்திரமத்தின் பெருமையை உலகுக்கு அறிவிக்க அவ்ஆச்ரமத்தை ஸ்வீகரித்து வெள்ளையுடையில்

உபதேசங்களாலும், கிரந்தங்களாலும் வேதமார்கத்தை நிலைநிறுத்தி, சரணாகதி சாஸ்திரத்தை உபதேசித்து, எக்காலத்திலும் இந்த ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்தமே சாஸ்வதமாய் நிலைபெற செய்தமை காட்டும்."

இதை கேட்டு சீடர்கள் துயரம் நீங்கப் பெற்றனர். எனவே ஸ்ரீராமானுஜனின் மறு அவதாரமே ஸ்வாமி தேசிகன் என்பது தெளிவாகும்.

"கவிதார்சிக ஸிம்ஹாய கல்யாண குணசாலிநே
ஸ்ரீமதே வெங்கடேசாய வேதாந்தகுரவே நம:





# 3. நம்பிள்ளையின் முத்துக்கள்


**பிள்ளை அநுக்கிரகத்தால் பிள்ளை பிறந்தது**

ஒரு நாள் நம்பிள்ளை மாத்யாஹ்நிகத்துக்கு எழுந்தருளிய போது வடக்குத் திருவீதிப் பிள்ளையின் தாயாரான அம்மி அம்மாள் நம்பிள்ளையை தண்டம் ஸமர்ப்பித்தாள்.

அம்மி அம்மாளை விசாரித்தார். "இப்பொழுது இங்கு வந்ததற்கு ஏதாவது காரணமுண்டோ என்று கேட்டார்.

"ஆம், உண்டு, என் பிள்ளை பேய்ப்பிள்ளையாக இருக்கிறன். அவனுக்குத் தேவரீர் ஒரு பெண்ணை விவாகம் செய்து வைத்தாயிற்று. அவள் ருது ஸ்நாதையான பிறகு ஒரு நல்ல நாளில் ஸஹசயன கல்யாணம் (சாந்தி கல்யாணம்) செய்து உள்ளே அனுப்பினோம். உடனே உள்ளேயிருந்து என் பிள்ளை சத்தம் போட்டான். எல்லோரும் ஓடி உள்ளே சென்று பார்த்தோம். எங்களுக்கு ஒன்றும் புரியவில்லை. அவனோ அழுகிறான். ஏன் அழுகிறாய் என்று கேட்டதற்கு. இது ஓர் ஆடுகிற பாம்பாக இருக்கிறது, மிகவும் பயமாக இருக்கிறது' என்று சொல்லி வெளியே வந்துவிட்டான். மற்றொரு ஸமயமும் இவ்விதமே ஆகிவிட்டது. அந்தப் பெண் வாழ வேண்டும். என் வம்ச வ்ருத்தியும் உண்டாக ஸ்வாமி அநுக்கிரகம் செய்ய வேண்டும்" என்று பிரார்த்தித்தாள். நம்பிள்ளை, "ருது ஸ்நாதையான பிறகு இங்கு அழைத்து வாரும்"என்று நியமித்தார்.

அதன்படியே அம்மி அம்மாள் அழைத்து வந்தாள். நம்பிள்ளை ஜலத்தை மந்த்ரித்து அந்தப் பெண்ணின் முகத்திலும் வயிற்றிலும் ப்ரோக்ஷித்து அனுப்பிவிட்டார். வடக்குத் திருவீதிப் பிள்ளையை அழைத்து, 'ருதௌ உபேயாத்' என்ற சாஸ்த்ரார்த்தத்தைச் சொல்லி அனுப்பினார். அன்றிரவு ஸஹஸயனத்தில் பயப்படாமல் இருந்தார். அன்றுமுதல் கர்ப்பம் தரித்துப் பன்னிரண்டாவது மாதத்தில் ஐப்பசி மாதம் திருவோண நக்ஷத்திரத்தில் ஒரு பிள்ளையைப் பெற்றெடுத்தாள் அந்தப் பெண்மணி. அந்தப் பிள்னை நம்பிள்ளையின் அநுக்கிரகத்தினால் பிறந்தமையால் லோகாசார்யபிள்ளை என்று நாமகரணம் பண்ணினார்கள். சிலகாலம் கழித்து நம்பெருமாளின் அநுக்கிரகத்தினால் ஒரு பிள்ளை பிறந்தார். அவருக்கு அழகிய மணவாளப்பெருமாள் நாயனார் என்று பெயரிட்டனர்.



# 4. திருவரங்க பெருமாளரையர்

1. திருவாய்மொழி 5-3-6 பாசுரத்தில் 'வலையுள் அகப்பட்டேன்' என்னுமிடத்தில் ஆழ்வார் திருவரங்கப்பெருமாள் அரையர் 'மீன்பிடிக்கும் வலையாக' அபிநயம் செய்தார். அப்போது இராமானுசர் அதை மாற்றி 'எம்பெருமான் தன் திருக்கண்களாகிய வலையால் அனைவரையும் அகப்படுத்திக் கொள்கிறான்' என்று உணர்த்திட அரையர் தனது அபிநயத்தை மாற்றிக் கொண்டார் என்று திருவாய்மொழி 5-3-6 ஈடு விரிவுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2. வெளியூரிலிருந்து திருவங்கத்திற்கு வருபவர்களைத் திருவரங்கனிடம், திருவரங்கப் பெருமாளரையர் அழைத்துச் சென்று ஸேவை செய்து வைப்பதுண்டு.

   ஒருமுறை வடதேசத்திலிருந்து மிக நன்றாகப் பாடக் கூடிய ஒருவர் திருவரங்கம் வந்தபோது, அவரை அழைத்துக் கொண்டு அழகிய மணவாளனிடம் சென்று, 'வெகு தூரத்திலிருந்து வந்திருக்கின்ற இவரை கௌரவிக்க வேண்டும்' என்று வேண்டிக் கொண்டதாகவும், அதன்படியே அழகிய மணவாளன் அவருக்காகத் தம்முடைய <u>நடையழகைக் காட்டியதாகவும்</u> திருவாய்மொழி 5-10-6 மற்றும் 6-9-3 ஈட்டுப் பேருரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

3. திருவரங்கப் பெருமாளரையர் தன்னுடைய இறுதிக்காலத்திலும் திருவரங்கத்தைப் பற்றிய நினைவுடனே எழுந்தருளியிருந்தார். இவரைக் காணவந்த இராமானுசர், "இப்போது திருவுள்ளத்தில் ஓடுகின்ற நினைவு எதைப் பற்றியது?" என்று வினவ, “எம்பெருமானுக்கு எத்தனையோ திருநாமங்கள் இருந்தாலும், 'திருவரங்கம்' என்ற நாலைந்து எழுத்துக்கள் சேர்ந்திருக்கிறபடிதான் என்னே! என்று நினைத்துக் கொண்டிருக்கிறேன்" என்றாராம். இதைக்கேட்டு வியந்த இராமானுசர் அரையர் விரும்பிய திருநாமம் என்று தாமும் "திருவரங்கம்" என்ற திருநாமத்தையே விரும்பியிருந்தாராம்.

*********

## 5. திருக்குடந்தை ஆண்டவன் ஸ்ரீ வேதாந்த ராமானுஜ மஹாதேசிகன் அருளிய அருள்மொழிகள்/ உபன்யாச வ்யாஸகங்ளிருந்து

**(ஸ்ரீரங்கம் ஸ்ரீமத் ஆண்டவன் ஆஸ்ரமத்தின் 9வது பீடாதிபதியாக பிரபலமாக திகழ்ந்த ஆசார்யர்)**

1. ஒரு பொருளை நம்முடையது என்று நினைத்தால், அதை நாம் இழந்தபோது நம்முடையது போய்விட்டது என்று அழுகிறோம். உதாஹரணமாக நமது வீட்டில் நமது நண்பர் ஒரு ஸாமானை வைத்துவிட்டுப்போனார். கொஞ்ச காலம் அது நம் வீட்டில் இருக்கிறது. நாமும் அதைக் காப்பாற்றி வைக்கிறோம். பிறகு அவர் வந்தால் அவரிடம் அதைக் கொடுத்து விடுகிறோம். அவரும் அதை எடுத்துக் கொண்டு போகிறார். இவ்வளவு நாள் வீட்டிலிருந்தது போய்விட்டதே என்று நாம் அழுகிறதில்லை; ஏன்? அது நம்முடையதல்ல; பிறருடையது; நம்மிடமிருந்ததே தவிர நம்மதில்லை என்று நினைப்பதால்; அதுபோல் வீடு, தனம், நிலம், பார்யை, புத்ரன், எல்லாம் பகவானுடையது; அவனுடைய உடம்பு அவனுக்கு பிரகாரமானது. நம்முடையதல்ல. கொஞ்ச நாள் நம்மிடம் வைத்திருக்கிறான். அவைகள் நம்மதல்ல என்கிற நினைவு இருந்தால் வீடு, தனம், நிலம்,பார்யை, புத்ரன் இவைகளுக்கு நாசம் வந்தாலும் துக்கப்பட வேண்டாம். பகவானுடையது, அவன் எடுத்துச் சென்று விட்டான் என்று துக்கப்படமாட்டான். இந்த எண்ணம் ஸம்பாதிக்க வேண்டும் என்றபடி.

2. ஸந்த்யாவந்தனத்தில் அடங்கிய காயத்ரீ ஜபத்தால் இவ்வுலகிலுள்ள ஸகல நன்மைகளையும் அடைந்து, மேன்மையுடன் வாழ்வதோடு மேலுலகங்களிலும், இவனுக்கு நன்மைகள் கிடைக்கின்றன. காயத்ரீ ஜபத்தால் அரும்பெரும் ஸித்திகளை எல்லாம் அடையலாம். வஸிஷ்டர் விசவாமித்திரர் முதலிய முனிவர்கள் இந்த காயத்ரியாலேயே மேன்மை பெற்றவர்கள், தேஹநலத்துடன் வியாதிகளில்லாமல் எல்லா ஸுகங்களுடன் இவ்வுலகில் வாழ்வதோடு மறுமையிலும் மோக்ஷங்களைக் கொடுப்பது இந்த ஸந்தியாவந்தனம்.

3. இந்த ஸந்த்யாவந்தனத்தை இதில் சொல்லப்பட்ட மந்திரங்களுடைய பொருளை அறிந்து கொண்டு செய்தாலும், அறியாமல் செய்தாலும், பலனில் குறைவில்லை. அதெங்ஙனே என்னில் சிலர் லௌகிக விவஹாரங்களில் புரோநோட் முதலிய பத்திரங்களில் தங்களுடைய கையெழுத்துப் போட்டு எழுதிக்கொடுக்கிறார்கள். அது கோர்ட்டுகளில் செல்லத்தக்கதே; சிலா கையெழுத்துப் போடவும் தெரியாமல் கைக்கீறல் போட்டு எழுதிக்கொடுக்கிறார்கள். அதுவும் செல்லத்தக்கதே. அதுபோல நல்ல ஜ்ஞானமிருந்து அறிவாளிகளானவர்கள் அர்த்த ஜ்ஞாநத்துடன் செய்தால்தான் ஸபலம், அதில்லாதவர்கள்

அர்த்தஜ்ஞானமில்லாமல் செய்தாலும் ஸபலமே எழுதப்படிக்கத்தெரிந்தவன் கீறல் போட்டால் செல்லுபடியாகாது, தெரியாதவனுக்கே கைக்கீறல். அதுபோல அர்த்த ஜ்ஞானம் ஸம்பாதிக்கக் கூடிய ஜ்ஞானம் வியுத்பத்தி உள்ள அதிகாரிகளுக்கு மந்த்ரங்களின் பொருளைத் தெரிந்துகொண்டு செய்யவேண்டும். மற்றவர்கள் மந்த்ரார்த்தங்கள் தெரியாமல் செய்தாலும் அவர்களுக்கு அது பலனைத் தரும், இனி இதில் சொல்லப்பட்ட மந்த்ரங்களின் பொருளை விளக்கிக் காட்டினால் இவைகள் நமக்கு என்ன நன்மைகள் தரும் என்றும் உணரலாம். அர்த்தம் தெரிந்து செய்தால் நமக்கே ஸந்தோஷகரமாயிருக்கும். பகவத் குணங்களையும் அனுபவிக்கலாம். அவைகளின் பெருமையும் விளங்கும்.

4. இப்படி இந்த ஸந்த்யாவந்தனத்தில் அடங்கிய ஸகல மந்திரங்களாலும் நாம் ஸர்வேச்வரனை வணங்கி வழிபட்டு இப்பூமியிலிருக்கும் வரை வேண்டிய ஸகல க்ஷேமங்களையும் பின்பு மோக்ஷாநந்தமளவான ஸகல க்ஷேமங்களையும் பிரார்த்தித்துக் கொண்டு எங்குமின்பமடை வதை வேண்டுவதாயிருப்பதால் இங்ஙனம் நித்யம் விடாது இந்த ஸந்த்யாவந்தனத்தால் ஸகல க்ஷேமங்களையும் ஸர்வேச்வரனிடமிருந்து பெறலாமாதலால் த்ரைவர்ணிகர்களனைவரும் உபநயநம் முதல் இந்த சிறந்த தர்மத்தை ஒருநாளும் விடாமல்செய்து இறைவனது திருவருளை அடைவார்களாக.



ஸ்ரீமத் திருக்குடந்தை ஆண்டவன்